සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கர்நாடக சங்கீதம் I

**அறிவுறுத்தல்கள் :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** தாளத்தந்திகள் காணப்படும் வாத்தியம்
(1) தம்புரா (2) வீணை (3) வயலின் (4) மோர்சிங்

**2.** "உற்றுமை சேர்வது..." எனத் தொடங்கும் தேவாரம் பாடப்படும் பண்
(1) பழம்பஞ்சுரம் (2) நட்டராகம் (3) தக்கேசி (4) பஞ்சமம்

**3.** வார்த்தைகள் குறைவாகக் காணப்படும் சபாகான உருப்படி யாது?
(1) ஜதிஸ்வரம் (2) பதவர்ணம் (3) தானவர்ணம் (4) கீதம்

**4.** பின்வருவனவற்றுள் 11 அட்சரங்களைக் கொண்ட தாளத்தொகுதி
(1) மிஸ்ர ஜாதி திரிபுடை, சங்கீர்ண ஜாதி ரூபகம்
(2) திஸ்ர ஜாதி துருவம், சங்கீர்ண ஜாதி ஜம்பை
(3) சங்கீர்ண ஜாதி திரிபுடை, சதுஸ்ர ஜாதி அட
(4) மிஸ்ர ஜாதி திரிபுடை, கண்ட ஜாதி மட்டியம்

**5.** நவக்ரஹ கிருதிகளை இயற்றியவர் யார்?
(1) சியாமா சாஸ்திரிகள் (2) தியாகராஜ சுவாமிகள்
(3) பாபநாசம் சிவன் (4) முத்துஸ்வாமி தீட்சிதர்

**6.** "வள்ளுவன் மறையும் மணிமேகலையும்..." எனத் தொடங்கும் சரணத்தையுடைய கீர்த்தனையின் இராகம்
(1) கல்யாணி (2) பந்துவராளி (3) கானடா (4) ஆரபி

**7.** தோடி இராகத்தின் நேர் பிரதி மத்திம இராகத்தின் மேள எண் யாது?
(1) 44 (2) 45 (3) 51 (4) 65

**8.** ஒரு பக்கம் கழியினாலும் மறுபக்கம் விரல்களினாலும் வாசிக்கப்படும் இசைக்கருவி
(1) மிருதங்கம் (2) மத்தளம் (3) தவில் (4) முரசு

**9.** மேலைத்தேய இசையில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களை மட்டும் கொண்ட சோடி யாது?
(1) தம்புரா, ஹார்மோனியம் (2) பியானோ, தபேலா
(3) வீணை, ஓகன் (4) கிற்றார், ஓகன்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations , Sri Lanka

**10.** இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறுவது
(1) இசைநாடகம் (2) கும்மி (3) கோலாட்டம் (4) காவடி

**11.** தாது ஆடுவதற்கும் மாது அபிநயத்திற்கும் ஏற்றதாக அமைந்திருக்கும் உருப்படி
(1) தானவர்ணம் (2) பதவர்ணம்
(3) நவராகமாலிகா வர்ணம் (4) தினராகமாலிகா வர்ணம்

**12.** பஞ்சபுராண ஒழுங்கில் திருவிசைப்பாவிற்குப் பின் பாடப்படும் பாடலின் இராகம்
(1) ஆனந்தபைரவி (2) கேதாரகௌளை (3) சங்கராபரணம் (4) பந்துவராளி

**13.** ஒரு வர்ணத்தின் சரணத்தையும் சரண ஸ்வரங்களையும் உள்ளடக்கிய பகுதி
(1) பூர்வாங்கம் (2) திரியாங்கம் (3) உத்தராங்கம் (4) ஷடாங்கம்

**14.** 'முத்திரைத் துளை' என்பது
(1) நாதஸ்வரத்தில் சீவாளி அமைந்துள்ள துளை ஆகும்.
(2) புல்லாங்குழலில் 'தாரந்திரம்' எனக் குறிப்பிடப்படும் துளை ஆகும்.
(3) ஒத்து வாத்தியத்தில் வாசிக்கும் துளை ஆகும்.
(4) புல்லாங்குழலில் வாய் வைத்து ஊதும் துளை ஆகும்.

**15.** கதலி ரஸத்திற்கு ஒப்பான கிருதிகளை இயற்றியவர் யார்?
(1) முத்துஸ்வாமி தீட்சிதர் (2) சியாமா சாஸ்திரிகள்
(3) முத்துத் தாண்டவர் (4) தியாகராஜர்

**16.** "சின்னஞ்சிறு கிளியே..." என்ற இராகமாலிகை அமைந்த தாளம்
(1) திஸ்ரசாபு (2) கண்டசாபு (3) மிஸ்ரசாபு (4) சங்கீர்ணசாபு

**17.** 'விரிபோணி' என்னும் அடதாள வர்ணத்தை இயற்றியவர் யார்?
(1) கனம் கிருஷ்ணய்யர் (2) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
(3) பச்சிமிரியம் ஆதியப்பையர் (4) பத்ராசல இராமதாஸர்

**18.** "தனதான தந்தனத் தனதான" எனும் சந்த அமைப்பைக் கொண்ட திருப்புகழ்
(1) "இறவாமல் பிறவாமல்..." (2) "ஏறுமயில்..."
(3) "பத்தியால் யானுனைப்..." (4) "அபகார நிந்தை..."

**19.** பின்வருவனவற்றுள் பிரதிமத்யம மேளகர்த்தாக்கள் அடங்கும் சக்கரம் யாது?
(1) ருத்ர (2) வேத (3) ருது (4) அக்னி

**20.** சிறுவர் பாடல்களை ஆக்கம் செய்வதற்குப் பொருத்தமான இராகங்களுள் ஒன்று
(1) பந்துவராளி (2) தோடி (3) சங்கராபரணம் (4) பிலகரி

**21.** "கந்தர்வ கான லோல..." என ஆரம்பிக்கும் சரணத்தையுடைய கீர்த்தனையின் பல்லவி
(1) "இனி நமக்கொரு..." (2) "நிதிசால சுகமா..."
(3) "மாயன் குழலிசை..." (4) "தேவிப்ரோவ..."

**22.** திருப்புராணம் பாடப்படும் இராகத்தின் பண்
(1) முல்லை (2) நட்டராகம் (3) செந்துருத்தி (4) நட்டபாடை

**23.** மீனாட்சியம்மன் பேரில் நவரத்னமாலிகையை இயற்றியவர் யார்?
(1) பாபநாசம் சிவன் (2) சியாமா சாஸ்திரிகள்
(3) கோபாலகிருஷ்ண பாரதியார் (4) முத்துஸ்வாமி தீட்சிதர்

**24.** குடுமியாமலை இசைக்கல்வெட்டு காணப்பட்டதாகக் கருதப்படும் காலப்பகுதி
(1) 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகள் (2) 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகள்
(3) 18 ஆம் நூற்றாண்டு (4) 20 ஆம் நூற்றாண்டு

**25.** ஸரிகபநிஸ் - ஸ்நிபகரிஸ என்ற ஆரோகண - அவரோகணத்தையுடைய இராகத்தில் அமைந்த கீர்த்தனை
(1) "அள்ளியுண்டிடலாம் வாரீர்..." (2) "அருமருந்தொரு..."
(3) "உள்ளமிரங்கி..." (4) "அலைபாயுதே..."



Department Of Examinations, Sri Lanka

**26.** திருமாளிகைத்தேவரால் அருளப்பட்ட திருமுறை
(1) தேவாரம் (2) திருவாசகம் (3) திருப்பல்லாண்டு (4) திருவிசைப்பா

**27.** சாபு தாள வகைகளுள் **இடம்பெறாதது**
(1) திஸ்ரசாபு (2) சதுஸ்ரசாபு (3) கண்டசாபு (4) மிஸ்ரசாபு

**28.** ரி. என். கிருஷ்ணன் வாசித்துப் பிரபல்யம் பெற்ற வாத்தியம்
(1) வயலின் (2) புல்லாங்குழல் (3) வீணை (4) நாதஸ்வரம்

**29.** பின்வருவனவற்றுள் திருக்கேதீச்சரப் பதியில் பாடப்பட்ட பதிகம்
(1) "பண்ணும் பதமேழும்..." (2) "பண்டு நால்வருக்கு..."
(3) "உற்றுமை சேர்வது..." (4) "மானினேர்விழி மாதராய்..."

**30.** பண்ணிசையில் பாஷாங்க இராகத்திற்கு இணையான பண் யாது?
(1) செந்துருத்தி (2) நட்டபாடை (3) நட்டராகம் (4) கௌசிகம்

**31.** முத்துஸ்வாமி தீட்சிதரால் கோவிலூரில் கதவு திறக்கப் பாடிய கிருதி
(1) "அக்ஷயலிங்க..." (2) "கஞ்சதளாயதாட்சி..."
(3) "ஸ்ரீநாதாதி..." (4) "ஆனந்தாம்ருதகர்ஷிணி..."

**32.** ஞானச்சிந்து, ஞானக்கும்மி முதலிய பாடல் வகைகளை இயற்றியவர்
(1) சுப்பிரமணிய பாரதியார் (2) கோபாலகிருஷ்ண பாரதியார்
(3) மாயூரம் சுப்பிரமணிய ஐயர் (4) இராமசாமி ஐயர்

**33.** ர, கு எனும் ஸ்வரஸங்கேதங்கள் குறிப்பன முறையே,
(1) சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம்
(2) சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம்
(3) ஷட்சுருதி ரிஷபம், அந்தர காந்தாரம்
(4) சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம்

**34.** பஞ்சமப் பண்ணுக்குச் சமமானதாகக் கருதப்படும் கர்நாடக இராகம் யாது?
(1) ஆஹிரி (2) பூபாளம் (3) பைரவி (4) காம்போதி

**35.** ஸா | ஸரிகம || பா | பதநிஸ் ||
ஸ்நி | தபமக || ரிக | மகரிஸ ||
எனும் ஸ்வர சஞ்சாரத்திற்குப் பொருத்தமான இராகமும் தாளமும் முறையே
(1) மோகனம், ரூபகதாளம் (2) சங்கராபரணம், ஆதிதாளம்
(3) சங்கராபரணம், ரூபகதாளம் (4) மத்யமாவதி, ஆதிதாளம்

**36.** சதுஸ்ருதி ரிஷபமும் சாதாரண காந்தாரமும் இடம்பெறும் சக்கரங்கள் யாவை?
(1) 2 ஆவது, 8 ஆவது சக்கரங்கள்
(2) 4 ஆவது, 10 ஆவது சக்கரங்கள்
(3) 5 ஆவது, 11 ஆவது சக்கரங்கள்
(4) 6 ஆவது, 12 ஆவது சக்கரங்கள்

**37.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பல இராகங்கள் சேர்ந்துவரும் உருப்படியாகும்.
B - சபாகான உருப்படிகளுள் ஒன்றாகும்.
C - நாயக-நாயகி பாவத்துடன் கூடிய உருப்படியாகும்.
D - சுலோகம், பத்யம், விருத்தம் போன்றவை பாடக்கூடியது.
மேற்கூறப்பட்டவற்றுள் இராகமாலிகைக்குப் பொருத்தமான கூற்றுக்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D

Department Of Examinations, Sri Lanka

[பக். 4 ஐப் பார்க்க

**38.** வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றிற்கு மிகப் பொருத்தமான அம்சங்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) அங்கத்தவர்கள், செயற்பத்திரம், ஒலிப்பதிவுக்கருவி, ஹார்மோனியம்
(2) கதை, ஒலிப்பதிவுநாடா, இசைக்கருவிகள், ஒளிக்கருவி
(3) அங்கத்தவர்கள், ஒலிப்பதிவுக்கருவி, நகைச்சுவை, தாளம்
(4) அங்கத்தவர்கள், கதை, நகைச்சுவை, இசைக்கருவிகள்

- பின்வரும் இராக வரைபினை அவதானித்து **39**, **40** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.




**39.** மேற்குறிப்பிட்ட வரைபினால் குறிக்கப்படும் இராகம் யாது?
(1) ஆரபி (2) பிலகரி (3) கானடா (4) ஹம்சத்வனி

**40.** மேற்குறிப்பிட்ட இராகத்தின் மேள எண் யாது?
(1) 15 (2) 29 (3) 51 (4) 65

※ ※



Department Of Examinations , Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

කර්ණාටක සංගීතය **I, II**
கர்நாடக சங்கீதம் **I, II**
Carnatic Music **I, II**

## கர்நாடக சங்கீதம் II

※ முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(i) 'ஆதிகுரு' எனும் சிறப்புப் பெயர் பெற்ற வாக்கேயகாரர் யார்?

(ii) $|_5 \; O_5 \; |_5$ எனும் அங்கத்தினையுடைய தாளத்தின் பெயர் என்ன?

(iii) நாதஸ்வரத்திற்குரிய சுருதி வாத்தியம் எது?

(iv) 'சங்கீர்ண' எனும் தாள வகையினைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படும் மன்னன் யார்?

(v) திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட பிரபல்யமான இசைநாடகம் யாது?

(vi) 72 மேளகர்த்தா சக்கரத்தில் ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள 4 ஆவது மேளம் குறிக்கும் ஸங்க்ய ஸங்கேதாட்சரம் யாது?

(vii) முத்துத்தாண்டவரின் பதங்கள் எப்பெயரால் சிறப்பிக்கப்படுகின்றன?

(viii) 'ஸ்வரமேளகலாநிதி' எனும் ஸமஸ்கிருத இசைநூலை எழுதியவர் யார்?

(ix) ரேவதி இராகத்தின் தாய் இராகத்தினையும் அதன் மேள எண்ணினையும் தருக.

(x) அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்ட நூல்கள் **இரண்டினைத்** தருக.

**2.** பின்வரும் இராகங்களுள் ஏதேனும் **ஓர்** இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. அதில் உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

(i) ஹரிகாம்போதி

(ii) கல்யாணி

(iii) மத்யமாவதி

**3.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.

(i) பதம்

(ii) 12 ஸ்வரஸ்தானங்களும் 16 ஸ்வரப் பெயர்களும்

(iii) ஜன்னியராகப் பிரிவுகள் (உதாரணத்துடன்)

**4.** தாளவாத்தியங்களுள் மிக முக்கிய வாத்தியமாக மிருதங்கம் விளங்குகின்றது.

(i) மிருதங்க வாத்தியத்தின் படத்தினை வரைந்து, அதன் பாகங்களைப் பெயரிடுக.

(ii) இவ்வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்த கலைஞர்கள் **நால்வரின்** பெயர்களைத் தருக.

(iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும் சுருதி சேர்க்கும் முறையினையும் விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Department Of Examinations , Sri Lanka

5. தியாகராஜ சுவாமிகளது வாழ்க்கை வரலாற்றினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

- வாழ்க்கைக் காலம்
- பெற்றோர் பெயர், பிறந்த இடம்
- சீடர்கள்
- வாழ்க்கைச் சம்பவங்கள்
- இசைப்பணி

6. பின்வரும் இசைக் குறியீடுகளை உதாரணத்துடன் விளக்குக.

(i) ஸ்தாயி குறியீடுகள்

(ii) கால அளவைக் காட்டும் குறியீடுகள்

(iii) தாளக் குறியீடுகள் **அல்லது** இதரக் குறியீடுகள்

7. நீர் இரசித்த பல்லிய இசை நிகழ்ச்சியை பின்வரும் விடயங்களை உள்ளடக்கி விமர்சிக்குக.

- இசைக்கருவிகளின் வகைகள்
- இசைக்கருவிகளின் பங்களிப்பு
- வாசிக்கும் பாணி
- வாசித்த உருப்படிகள் (இராகம், தாளம்)
- ஒத்திசைவு
- ஏற்படும் உணர்வு

**அல்லது**

இந்தியாவின் 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டுகளின் கலாசாரப் பின்னணியினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

- இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகளும் அவற்றின் தோற்றமும்
- இக்காலப்பகுதியில் இசைக்குப் பங்களிப்புச் செய்தோரும் அவர்களது பங்களிப்புகளும்

* * *

Department Of Examinations , Sri Lanka